தமிழ்ப் பொழில்.

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு.

துணர்	திருவள்ளுவர் யாண்டு ௧௯௮௭	மலர்
௩௧	மன்மத, மாசி, 1956 பிப்ரவரி, மார்ச்சு.	௰௧.

அரசியல் மொழி.

அனைத்திந்திய அரசியல் மொழியாக எதனைக் கொள்வது என்ற வினா உரிமையடைதற்கு முன்னரும் பின்னரும் பல பெருமக்களால் வினவப்பட்டும் விடை கூறப்பட்டும் வந்ததாகும். பெரும்பான்மையான மக்களால் பேசப்படுவது என்றுகூறி இந்தி மொழியினைக் கொள்ளவேண்டுமென்பார் ஒருசாரார். இந்திய நாட்டு அரசியல் திட்டப்படி இந்தியாவில் வழங்கும் பதினான்கு மொழிகளும் அரசியல் மொழியாதற்குத் தகுதியுடையனவாகும். தனித்த ஒரு மொழியை அரசியலுக்குரிய மொழியாகக் கொள்ளுவதால் அம்மொழி பேசுவோருடைய செல்வாக்கும் ஆக்கமும் உயரும். இந்தியைத் தாய் மொழியாகக் கொள்ளாதவர் மூன்று மொழிகள் படித்தறிய வேண்டிய இன்றியமையாமையிலும், இந்தியைத் தாய்மொழியாகக் கொண்டவர் இருமொழி பயின்றால் அமையும் என்ற வகையிலும் ஆகிவிடும். இதனால் இந்தியப் பெருநிலப் பரப்பில் வாழும் மக்களில் இந்தி மொழிக்காரருக்கு முன்னேற வழிவகுத்தும் ஏனையோருக்கு வழிவிடாதவாறு அதனைத் தடுத்தும் நிறுத்துவதுபோலாகின்றது. இவ்வாறு கூறி இந்தி கூடாதென மொழிவர் பிறிதொரு சாரார். இன்றுள்ள நிலைமையில் தமிழராயினும், மலையாளிகளாயினும், வடநாட்டவர்களாயினும் கருத்துக்களை விளக்கத் தங்களுள் இடைமொழியாகக்கொண்டு பெரும்பாலும் பேசி வருவது ஆங்கிலமேயாகும்.

இவ்வாறிருந்தும் ஆங்கிலம் வேற்றவர் மொழி என்பதற்காக அதனை விடுத்துப் புதியதோர் மொழியைத் தேர்ந்தெடுத்து அரசியல் மொழியாக ஆக்கவேண்டுமென்பது நாட்டுப் பற்றாளரில் பலர் கூறினர். மேற்போக்காக நோக்கும்போது இக்கருத்து சரியெனத் தோன்றினாலும், ஒரு மொழியை அரசியல் மொழியாகக்கொண்டு

செய்யப்படும் அனைத்திந்திய அரசியலாரின் போக்கு நடைமுறைக்கு ஒவ்வாததாகவுள்ளதை அறிஞர் பலர் இன்று உணர்ந்துள்ளனர்.

(28—1—56) சனிக்கிழமை இதனையே பொருளாகக்கொண்டு அரசியல் துறையில் ஒருவருக்கொருவர் எதிரிடையாகவுள்ளவர்களும், வேறு பலவகையான துறைகளிலுள்ள அறிஞர்களும் சென்னை நகரில் ஒன்றுகூடிப் பேசினர். இதுபோன்றதோர் கூட்டுறவைத் தமிழ்நாடு இதுகாறும் கண்டதில்லை. இக்கூட்டத்தில் இருவர் குறிப்பிடத் தகுந்தவர். ஒருவர் பெரியார், இராமசாமியவர்கள்; மற்றவர் பேரறிஞர், இராசகோபாலாச்சாரியாரவர்களாவர். அறிவாலும், ஆண்டாலும், தொண்டாலும் மூத்தவர்கள். தண்டூன்றித் தளர் நடையிட்டாலும் நாத்தொலைவில்லா நன்னரராளராய் இலங்குபவர், இவ்விருவரும் தமிழ் நாட்டின் அரசியல் துறையில் சில ஆண்டுகள் ஒற்றுமையுடையராகவும், பல ஆண்டுகள் இரு துருவங்கள் என்னுமளவுக்கு வேற்றுமையுடையராகவும் அறிவுரை பகர்ந்து வாழ்ந்து வருபவராவர்.

இவர்கள் மட்டுமன்றித் தமிழ் நாட்டிலுள்ள பலவகையான அறிஞர்களும் ஒன்றுகூடியிருந்தனர். சுருங்கக் கூறின் அன்று கூடிய அக்கூட்டம் தமிழ்நாட்டு மக்களின் உள்ளங்களையே காட்டுவதாக இருந்தது எனக் கூறுவது மிகவும் பொருந்துமென்று எண்ணுகின்றோம். மக்களுக்காக மக்களால் நிறுவப்படுகின்ற மக்களுடைய அரசியல் என்னும் உயரிய மக்களாட்சியின் பெயரால் அரசோச்சும் அனைத்திந்திய அரசியலார் தமிழ்மக்களின் ஒன்றுபட்ட வேண்டுகோளான அன்றைய முடிபினை ஏற்பாரென எண்ணுகின்றோம். அன்று அறிஞர் இராசகோபாலாச்சாரியார் தம்முடைய சொற்பொழிவில் கூறிய முடிபுகளுள் எல்லாராலும் ஒத்துக்கொள்ளப் பட்டவை இரண்டாகும்.

1. அரசியல் மொழியாக இருக்க ஆங்கிலத்திற்குள்ள மதிப்பு இந்திக்கு இன்னும் வரவில்லை. ஆகவே ஆங்கிலமே தொடர்ந்து அரசியல் மொழியாக இருக்கவேண்டும்.

2. இன்னுஞ்சில ஆண்டுகளுள் (1965-க்குப் பிறகு) இந்தியில் அனைத்திந்திய அரசியல் வேலைகள் நிகழ்வுற வேண்டுமென்ற முடிபு தவறானதென்பவைகளாகும்.

இந்தி அனைத்திந்திய அரசியல் மொழியாவதை அனைவரும் எதிர்த்தனர். தென்னாட்டு மக்களால் நன்கு மதிக்கப்படும் தலைவர்களின் ஒருமித்த முடிபினை ஏற்று அனைத்திந்திய மக்களாட்சிக்கு மாண்பினை நல்குவரென எதிர்பார்க்கின்றோம்.

வருந்துகின்றோம்.

பம்பாய் நகரப் பல்கலைக் கழக வரலாற்று ஆராய்ச்சித்துறைத் தலைவரும், கத்தோலிக்க கிறித்துவ நெறித் துறவியும் ஆகிய H. ஹீராஸ் (Revd. Fr. H. Heras) சென்ற யாண்டின் இறுதித் திங்கள் 14-ஆம் நாள் இயற்கை யெய்தியமை அறிந்து வருந்து கின்றோம்.

கூற்றங் குதித்துய்தல் உயிரினங்களால் கூடாத தொன்று. ஆயினும் இவரைப் போன்ற அருமையான புலத்துறை முற்றிய நலத்தகையாளரை இழக்க யாருக்கும் மனம் வராது. நுண்மாண் நுழைபுலத்தொடு காய்தல் உவத்தலின்றி நடுவுநின்று ஆய்ந்து உலகம் ஒப்ப உணர்த்தும் உயர்புகழாளரின் இழப்பு அறிவுலகத் திற்குப் பேரிழப்பாகும். வரலாற்றாசிரியரிடம் அமைய வேண்டிய மேற்காட்டிய பண்பாடுகளெல்லாம் ஒருங்கமைந்த உண்மை விளம்பி யாக வாழ்ந்தார்.

நம்முடைய இந்திய நாட்டில் பன்னெடுங்காலமாக நிலவிவரும் எந்தக் கொள்கைகளிலும் ஒன்றன் சார்பில் இவருக்கு ஈடுபாடு இருக்க முடியாது. இவர் ஸ்பெயின் நாட்டில் பிறந்தவர். ஆதலின் இப்பெருந்தகை தாம் மேற்கொண்ட புதைபொருள் ஆய்வுத்துறை யில் பல சிறந்த வுண்மைகளை வலியுறுத்தியுள்ளார்.

சிந்துவெளியில் பண்டு வாழ்ந்த மக்கள் தமிழ் மக்கள்தாம் என்றும், அவர்களுள் உலகாளுதலை மேற்கொண்டவர், மீனவர், பரவர் என்னும் ஒரு குடியினைச் சார்ந்த இரு பிரிவினரென்றும், அவர்களுள் மீனவர் ஆண்ட நிலப் பரப்பிற்கு மீனாடு எனவும், பரவர் ஆண்ட நிலப் பரப்பிற்குப் பரவர் நாடு எனவும், மொகஞ்ச தாரோ சித்திர எழுத்துக்களைக் கொண்டு அறிந்து வெளியிட்டார். கி. மு. ஐயாயிரம் ஆண்டுகட்கு முன்னரேயே தமிழ் மக்களின் நாக ரிகம் இந்தியா முழுமையிலும் பரவியிருந்த தென்பதற்கு இவருடைய ஆய்வுரை அழியாச் சான்றாக வுள்ளது. வரலாறு காணமுடியாத காலத்திற்கு முன்னரேயே கொடிது கடிந்து கோல்திருத்தி ஆண்ட தமிழினத்தின் தொன்மையை உள்ளவாறறிவிக்கும் ஆய்வாளரை இழந்தது தமிழினத்திற்கு மிகப்பேரிழப்பாகும்.

சித்திர எழுத்துக்களை அறிந்து உணர்த்துவதில் இவருக்கிருந்த புலமை அறிஞர்க்கே வியப்புத்தருவதாகும். இத்துறையில் மற்றவர் புலமையடைதலும் ஆய்தலும் எளிமையானதல்ல. இதனால் இந்திய நாட்டின் ஆய்வுத்துறை ஓர் அரிய பெரிய அறிஞரை இழந்துவிட்ட தென்றே கூறவேண்டும். இத்தகைய நல்லறிவாளர் வழிநின்று உண்மைகண்டு நல்ல பல தொண்டுகளை நாட்டுக்கும் மக்களுக்கும் இயற்றி உலகிடை முன்னேறுவோமாக.

சென்னைப் பல்கலைக் கழகத் தமிழாராய்ச்சித் துறைத் தலைவரும் திருவனந்தபுரம் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியரும் பன் மொழிப் புலவருமான பேராசிரியர், எஸ். வையாபுரிப்பிள்ளை அவர் கள் 17—2—56 வெள்ளிக்கிழமை இரவு 11-30 மணிக்குத் தமது இல்லத்திற் காலமான செய்திகேட்டு மிகமிக வருந்துகிறோம்.

பிள்ளையவர்கள் வழக்கறிஞராகப் பயின்று பட்டம் பெற்றுச் சின்னாள் அத்தொழிலை மேற்கொண்டாராயினும் கல்லூரிப் படிப்புக் காலத்திலேயே தமிழிலும் இலக்கிய ஆராய்ச்சியிலும் அவர் உள்ளம் ஈடுபட்டது. தமிழ்ப் பெரியார் மறைமலையடிகளாரிடம் தமிழ் பயிலும் வாய்ப்பினைப்பெற்ற பிள்ளையவர்கள், தமிழ் பேசுவது தம் உயர்வுக் கிழுக்கென்ற நிலையிருந்துவந்த அக்காலத்தில் பி. ஏ. வகுப்பில் தமிழில் முதல்வராகத் தேறி சேதுபதி பதக்கமும் பெற்றார்.

அதுமுதலே தமிழ்ப்பணி செய்யும் அவா அவருள்ளத்தில் முளைவிட அதனைச் செவ்வையாக ஆற்றவேண்டி மேனாட்டு மொழி களிலும் திராவிட மொழிகளிலும் சிலவற்றையும், வடமொழியையும் கற்றறிந்து தமிழ் இலக்கிய இலக்கண வரலாற்றுத் துறைகளில் அரியபல ஆராய்ச்சிக் கட்டுரைகளை வெளியிட்டார். நூலாசிரியர் களின் காலத்தை அறுதியிட்டுணர்ந்துணர்த்துவதில் ஊக்கங் கொண்டவர். கருத்து வேறுபாட்டிற்குரிய பொருள்களைபற்றித் தம் முடிபைத் துணிந்து கூறும் உரமுடையவர். சமய நூல்களைப் பற்றியும் பல ஆராய்ச்சிகளை எழுதியவர். மனோன்மணியம் முதலிய சிறந்த நூல்களைப் பதிப்பித்துப் பல்லாற்றானும் தொண்டுசெய்தவர்.

பிள்ளையவர்கள்செய்த பணிகளுள் குறிப்பிடத்தக்கது. சென்னைப் பல்கலைக் கழகத்தார் வெளியிட்ட பேரகராதித் தொகுப்புக் குழுத் தலைவராயிருந்து வெளியிட்டதாகும்.

கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின்பால் அன்புடையவராய பிள்ளை யவர்களின் இழப்புத் தமிழகத்திற்கே ஒரு பேரிழப்பாகும். அவர்கள் பிரிவுகுறித்து வருந்தும் தமிழ் மக்களுக்கும் பிள்ளையவர்களின் குடும்பத்தாருக்கும் எமது ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

பொழிற்றொண்டர்.

——o——

மதிப்புரை

திருஞான சம்பந்த மூர்த்தி நாயனர் தேவாரம் மூன்ருந் திருமுறை

தருமையாதீன வெளியீடு விலை ரூ. 5—12—0

திருஞான சம்பந்த மூர்த்தி நாயனர் அருளிச்செய்த தேவாரத்துள் மூன்ருந் திருமுறையானது தருமபுர ஆதீன முதற் குரவர் ஸ்ரீலஸ்ரீ குரு ஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள் குருபூஜை விழாமலராய் வெளிவந்துள்ளது. அழகிய கடிதமும் நல்ல எழுத்தும் இடையிடையே அழகிய பல ஓவியங்களும் பெற்ற இம் மலரானது காண்போர் கருத்தை எளிதிற் கவர்ந்து கொள்கின்றது.

முகப்பில் தற்கால ஆதீன குரவரின் திருவடி வணக்கமாய்ச் செய்யப்பெற்ற செய்யுள்கள் திருமுறையை வெளியிட்ட அடிகளாரின் சிறந்த செயலினை இனிய முறையில் எடுத்தியம்புகின்றன. அடுத்தடுத்துக் காணப்பெறும் சிற்ருராய்ச்சிப் பெரும் பொருட் கட்டுரைகள், இயற்கைப் பொருளின்பம், இன்ப உணர்ச்சியிற்றிளைத்தல் என்னுங் கட்டுரைகளெல்லாம் படிப்பவரின் உணர்ச்சியைத் தூண்டுவனவாயுள்ளன. இவற்றின் பின் காணப்பெறுந் தலங்களின் வரலாற்றுக் குறிப்பென்னுங் கட்டுரையானது ஒவ்வொருவரும் நன்கு படித்துணரவேண்டிய வரலாற்றுச் செய்திகள் பலவற்றைத் தன்னிடத்தே கொண்டுள்ளது.

இம் மூன்ருந் திருமுறைப் பதிகங்களுக்குக் குறிப்புரை எழுதி உதவியவர் நமது மதிப்புக்குரிய சைவத் திருவாளர் பண்டித அ. கந்தசாமிப் பிள்ளையவர்களாவார். இவர்கள் தமிழிலும் சைவத்திலும் நல்ல அறிவு படைத்தவர்களாகையினுலே தமிழ் மரபும் சைவ சித்தாந்த மரபும் தோன்றக் குறிப்புரை எழுதியுள்ளார்கள். எடுத்துக் காட்டாக, கோயிலைப் பற்றிய முதற் பதிகத்துள் "தாரினுர் விரி" என்னும் ஒன்பதாம் பாட்டுள் "சீரினுல் வழிபா டொழியாததோர் செம்மையால் அழகாய சிற்றம்பலம், ஏரினுல் அமர்ந்தாய்" என்னும் பகுதிக்கு "ஞான கானத்தால் வழிபடுதலை ஒழியாததொரு செம்மையால் அழகான சிற்றம்பலத்தைத் திருக்கூத்தெழுச்சியால் விரும்பினவனே!" என்று பொருளெழுதியுள்ளார்கள். திருச்சிற்றம்பலத்திற்கு அழகு வேறு எப் பொருள்களாலுங் கிடைக்கவில்லை; நல்ல இசையைக்கொண்டு அடியார் வழிபடுதலினுலேயே அதற்கு அழகு கிடைத்தது; அங்ஙனம் இசையழகு படைத்த அம்பலத்தில்

இறைவன் அவ்விசைப் பாடல்களைக் கேட்டுக் கேட்டு எழுச்சியோடு அமர்ந்துள்ளான் என்னுங் கருத்து எவ்வளவு அழகாக உள்ளது!. சீர் என்பதற்கு அழகு, புகழ், செல்வம் முதலிய பல பொருளிருப் பினும் இசை (ஞான கானம்) என்னும் பொருளைப் பிள்ளையவர்கள் கொண்டது நாம் மகிழ்ந்து பாராட்டுதற்குரியதாகும்.

திருப்பூந்தராய்ப் பதிகத்துள் (2) 'காவியங் கருங்கண்ணினுள்' என்று தொடங்கும் பாட்டுள் ''ஒன்றிரண்டொரு மூன்றொடு சேர் பதி'' என்பதற்குச் சீகாழிப் பெயர் பன்னிரண்டுள் ஆருவது பெய ராகிய பூந்தராய் என்று எழுதியுள்ள ஆராய்ச்சித் திறன் அறிந்து மகிழ்தற்குரியதாம்.

திருவுசாத்தானத்தைப் பற்றிய 'ஆணலார்' என்று தொடங்கும் பாட்டுள் ''பேணுவார் பிணியொடும் பிறப்பறுப்பானிடம்'' என்னும் பகுதிக்குப் பிள்ளையவர்கள் 'மலமாயை கன்மங்களாகிய பிணியுடனும் (பாசத்துடனும்) பிறப்பை அறுப்பானிடம்' என்று பொருளெழுதி யது அவர்களின் சைவ சித்தாந்த உணர்ச்சியைக் காட்டுகிறது.

கோயிலைப் பற்றிய பதிகத்துள் இர்ண்டாவது பாட்டில் ''கொட் டமே கமழுங் குழலாளொடு'' என்னும் பகுதிக்கு உரை எழுதும் பொழுது, கொட்டம்—நறுமணம். '' கொட்டமே கமழுங் கொள்ளம் பூதூர்" எனப் பின்னும் வருதல் காண்க, என்றனர். கொட்டம் என்பது ஐந்து மணப் பொருள்களில் ஒன்று என்பதை ''கொட்டந் துருக்கந் தகரம் அகிலாரம், ஒட்டிய வைந்தும் விரை" (சிலப்—பக். 154) என்னும் மேற்கோட் செய்யுளால் அறிகிரேம். இக் கொட்டம் என்னுஞ் சொல்லையே பிற்காலத்தார் 'கோட்டம்' என நீட்டி வழங் கலாயினர். "சந்தனம் அகிலி னேடு தகரங் குங்குமமே கோட்டம், இந்தவைந் தென்று சொல்லும் எய்திய விரைகளின் பேர்" என்பது சூடாமணி நிகண்டு.

திருப்பிரம புரத்தைப் பற்றிய (110) பதிகத்துள் ''சுரபுரத் தினைத் துயர்செய் தாரகன் துஞ்ச வெஞ்சினக் காளியைத் தருஞ் சிர புரத்துளான்'' என்னும் (7) பாட்டிற்குத் ''தேவருலகைத் துன் புறுத்திய (தாரகன்) அசுரர்களுக்குப் பற்றுக் கோடாயிருந்த மகிடா சூரன் ஒழியத் துர்க்கையை அம்பிகையின் அம்சத்தினின்றும் தோற்று வித்தருளிய சிரபுரத்திலுள்ள சிவன்'' என்று பொருள் எழுதப் பெற்றுள்ளது. ஆனல், மகிடாசூரனைக் கொன்றவள் கொற்றவை யென்னுந் துர்க்கை யென்றும், தாரகன், தாருகன் என்று பெயர் படைத்த அசுரனைக் கொன்றவள் காளி என்றும் அறிகின்றேம்.

“அடர்த்தெழு குருதி யடங்காப் பசுந்துணிப்
பிடர்த்தலைப் பீட மேறிய மடக்கொடி
வெற்றிவேல் தடக்கைக் கொற்றவை யல்லள்
அறுவர்க் கிளைய நங்கை யிறைவனை
ஆடல்கண் டருளிய வணங்கு சூருடைக்
கானக முகந்த காளி தாருகன்
பேருரங் கிழித்த பெண்ணு மல்லள்”

(வழக்குரை—20)

என்று சிலப்பதிகாரம் கூறுகிறது. அருணசல புராணத்துள் துர்க்கை மகிடாசூரனைக் கொன்ற செய்தி கூறப்பட்டுள்ளது. அங்கு மகிடாசூரனுக்குத் தாருகன் என்று ஒரு பெயரிருந்ததாகத் தெரியவில்லை. காளி தாருகனைக் கொன்ற வரலாறு திருக்கூவ புராணத்துள் கூறப்பட்டுள்ளது.

இப்பதிப்பில் அச்சுப்பிழைகள் சில உள்ளன. எடுத்துக் காட்டாய் பக்கம் 7ல் ‘தேரே நாடக மேடையாக’ என்பதற்கு ‘நேரே நாடக மேடையாக’ வென்றும், பக்கம் 172ல் ‘நில்லா னீசன்’ என்பதற்கு ‘நில்லா நீசன்’ என்றும், பக்கம் 515ல் ‘ஞாலம் நின் புகழே மிக வேண்டும்’ என்பதற்கு ‘ஞாலம் நின் புகழே வேண்டும்’ என்றும், பக்கம் 538ல் ‘உமையவள் கண் களிணைக்கயலே‘ என்பதற்கு ‘உமையவள் கண்க ளிணைக் கழலே‘ என்றும் காணப்பெறுவனவற்றை நோக்குக.

திருமுறைகளெல்லாம் வரிசையாக உரையோடு வரவேண்டுமென்று தருமையாதீன குருமகாசந்நிதானமவர்கள் செய்துவருஞ் செயல்களெல்லாம் அறிஞர்களால் மிகமிகப் பாராட்டுதற்குரியனவாகும். நாட்டின் பல பாகத்தில் வாழும் சைவப் பெருமக்கள் திருமுறைகளில் ஒவ்வொரு பாட்டிற்கு அனுபூதியான நயமான உரைகளைச் சொல்லிவருகின்றனர். அவ்வுரைகளெல்லாம் அவர்களோடு அழிந்து போய்விடாமல் அவற்றை ஒருங்கு திரட்டி வெளியிடவேண்டும். திருமுறைகளைப்பற்றிக் கூறிவரும் உரைகளையெல்லாம் எழுதியனுப்ப வேண்டுமென்று அறிஞருலகத்திற்கு ஒரு அறிக்கை வெளியிட்டால் பல உரைகள் மடாலயத்தைத் தேடிவரும். அவற்றை நன்கு ஆராய்ந்து தகுதியானவற்றை வெளியிடலாம். இங்ஙனம் எல்லாத் திருமுறைகளும் உரையுடன் வந்தால் சமய உலகத்திற்கு ஒரு பெரும் உதவியாயிருக்கும்.

வித்துவான், திரு. அடிகளாசிரியர்.

பழந்தமிழர் பண்பாடு.

வித்துவான். வீ. உலகவூழியர்,
[தமிழ் விரிவுரையாளர், நகராண்மைக் கல்லூரி, சேலம்.]

தமிழர்.

தமிழர் யார்? தமிழ்மொழி பேசுபவர். எனின் பிற மொழியைத் தாய் மொழியாகக்கொண்டவர் தமிழ் பேசுகின்றனர் அன்னார் தமிழராகாரோ? ஆகார். தமிழ் மொழியைத் தாய் மொழிபோல—இல்லை, தாய்மொழியாகக் கருதிப் பேசித் தம் வாழ்வில் அதனைக் கலந்து அதனில் தாம் பிரியாது ஒழுகுபவரே தமிழராவர்.

தமிழ் நிலத்து வாழ்பவர் எல்லாரும் தமிழராகார். தமிழ் நிலத்து வாழ்பவராயினும் வேற்று மொழியைத் தாய் மொழியாகக் கொண்டொழுகுபவரும் வேற்று மொழியைத் தாய் மொழிபோற் கருதியொழுகுபவரும் எங்ஙனம் தமிழராதல் பொருந்தும்? பொருந்தாது.

பழங்காலத்து வேற்று நிலத்திலிருந்து தமிழ் நிலத்துப் புகுந்து வேற்று மொழிகளைத் தாய்மொழியாகக் கொண்டொழுகியவர் தமிழரோடு நெருங்கிப் பழகியமையால் தந்தாய் மொழிகளைப் பேசுதலொழிந்து எழுத்தளவில் மாத்திரம் அவைகளைக் கற்றுவந்து, பின்னர் அத்தொழிலையும் மேவாது தாய் மொழிபோலத் தமிழினைக்கொண்டு வாழ்பவர் ஒரு சில கூட்டத்தினர் நந்தமிழகத்திருக்கின்றனர். அவர்களைத் தமிழரெனல் பொருந்துமேற் கொள்க.

தாம் தமிழையே பயின்றும், பேசியும் ஒழுகுகின்றனரேனும் இன்னார் சில வேளைகளில் தமிழ் மொழியை விழையாது ஒதுக்கி நோக்குகின்றனர். ஆதலின் 'பொருந்துமேற்கொள்க" எனப் புகலுவேம் ஆயினம்.

வேற்று நாட்டகத்து வாழ்பவரேனும் அன்னார் தந்தாய் மொழியாகத் தமிழ் மொழியைத் தம் அகத்துக்கொண்டொழுகுபவர் தமிழரே.

பழந்தமிழர்.

அரும்பு மொக்கு மலர் அலர் பிஞ்சு காய்களை நோக்கப் பழம் பழமை (பழம் + ஐ = பழமை) யெய்தினாற்போல இக்காலத்

துத் தமிழரை நோக்க ஒரு தலைமுறை முந்திய தமிழரும் பழந் தமிழராவர். எனினும் தலைப்பில் குறிக்கப்பெற்றுள்ள பழந் தமிழர் என்னுந் தொடர் சங்க காலத்தில் வாழ்ந்த தமிழரையே குறித்துச் சுட்டி நின்றதெனக் கொள்க. பழந்தமிழருடைய கல்வி, கேள்வி, அறிவு, ஒழுக்கம் முதலாக விரிந்துகிடந்த பல இயல்புகளுள் அவர்தம் பண்பாட்டினைப்பற்றி ஒரு சிறிது விளக்குதற்கு இக்கட்டுரை முயலுகின்றது.

பண்பாடு.

பண்பாடு என்பதனை விளக்கிக் கூறப்போந்த பேராசிரியர் ஒருவர் அதன் விளக்கத்தை நன்கு புலப்படக் கூற முடியுமா றில்லை என்று கூறிப்போந்தனர். பண்பாடு போன்ற கருத்துப் பொருள்களை உணர்த்தும் சொற்கட்குப் (Abstract) பொருள் கூறி விளக்கஞ் செய்தல் என்பது எளியதொன்றன்று. தத்தங் கருத்திற்கும் கொள்கைக்கும் ஏற்ப ஒவ்வொருவரும் பொருளும் விளக்கமும் புகன்றொழிவர். ஒருவர் கூறியபடி மற்றொருவர் கூறார். எல்லா மொழியுள்ளும் இவைபற்றி இவ்வாறு ஒருவர் கருத்தொடு மற்றொருவர் கருத்து ஒவ்வாதபடி கூறியிருத்தலை அவ்வம்மொழிகளைப் பயின்றவர் நன்கு அறிவர். சொற்பொருள் விளக்கங் கூறுபவர் அச்சொல்லின் வேரினையும் அதன் பொருளையும், அச்சொற்கும் அது குறிக்கும் பொருட்கும் உள்ள தொடர்பினையும் அதன் ஆட்சியினையும், அதன் வரலாற்றினையும் அச்சொல் வேறு பொருள்பற்றி வளைந்து செல்லும் செலவினையும் உணர்ந்து விளக்குதல் வேண்டும். அச்சொற் பொருளை வேறு மொழியிலுள்ள சொற்பொருளோடும் ஒப்பு நோக்குதலும் ஓரளவு உண்மை காணுதற்கு உதவிசெய்யும்.

'பண்பாடு' என்பதனைப் பண்டையோர் பண்பென்றே யாண்டனர். பண்பாடு என்னும் பொருளைக் குறிக்க வழங்கப் படும் பண்பு என்னும் சொல்லும், குணம் இயல்பு என்ற பொருளோடு நெருங்கியதாய் ஆளப்படும் பண்பு என்னும் சொல்லும் பொருளால் வேறுபாடுடையன. பல குணங்களும் பண்பினுள் அடங்குமேனும் அவைகளுள் தலைமை கருதிப் பண்பாட்டினைச் சிறப்பாகப் பண்பென்றே தெய்வப் புலமைத் திருவள்ளுவர்

கூறினர். அவர் பண்புடைமை என ஓரதிகாரம் வகுத்திருக்கின்றனர். பிற்காலத்தவர் பல பொருள் குறிக்கும் ஒரு சொல்லாகிய பண்பு என்னுஞ் சொல்லைப் பண்பாடு என்னும் பொருளில் ஆளாமல் பண்பாடு என்ற சொல்லையே ஆள்வாராயினர்.

பரிமேலழகர் "பெருமை சான்றாண்மைகளில் தாம் வழுவாது நின்றே எல்லாரியல்புகளும் அறிந்து ஒத்து ஒழுகுதல்" என்று பண்பாடு என்னும் சொற்குப் பொருள் விளக்கம் கூறியிருக்கின்றனர்.

கற்றறிந்தார் ஏத்தும் கலித்தொகையுள் நெய்தற்கலி பதினாறும் செய்யுளில் ஆசிரியர் நல்லந்துவனார் பண்பாட்டினைக் குறித்து விளக்கம் செய்யுமிடத்துப் "பண்பெனப் படுவது பாடறிந் தொழுகல்" என்று கூறியுள்ளார். அவ்வடியினுக்கு "மக்கட் பண்பு என்று சொல்லப்படுவது உலக ஒழுக்கம் அறிந்து ஒழுகுதலை" என உரையாசிரியர் நச்சினார்க்கினியர் உரை கூறியிருக்கின்றார். உரையாசிரியர் கூறும் விளக்கங்கள் ஒருபுடை ஒவ்வுமேனும் தெய்வப்புலவர் திருவள்ளுவர் கருத்தினையும் ஆசிரியர் நல்லந்துவனார் கருத்தினையும் முற்றவுணர்த்தும் பெற்றியன அல்ல. இனி, யாம் கூறுவது பிறர் கருத்துக்கு எப்படித் தோன்றும் என்பதனை அறிவேம்; எனினும் பண்பாடு என்னும் சொல்லையும், தெய்வப்புலவர் திருவள்ளுவனார் பண்புடைமை என்னும் அதிகாரத்துக் குறள்களிற்கூறிய பொருளையும் ஒருவாறு இயைத்து நோக்கிக் கூறுவேம்.

"பண்" என்றதன் அடியாகப் பிறந்த சொல் பண்பு, பண்பாடு என்பன. உழுது எருப்பெய்து விதைத்து இளங்களைகட்டு நீர்கால் யாத்துப் பயிர்செய்த செய் பண்ணை என வழங்கப்படுகின்றது, வழூச்சுரம் புணர்த்தாது எழுவகைச் சுரத்தினும் இசைவு தோன்றப் பொருத்தியமைத்துப் பாடும் முற்றிய இசை பண் என வழங்கப்படுகின்றது. இவ்வழக்குகள் செய்யுள் வழக்கிலும் பரவை வழக்கிலும் உள்ளன. சித்தர்கள் நூலில் பலவகைத் திருத்தங்கள் அமையச் செயற்கைப் பொருளாகப் பண்ணப்பட்ட கற்பூரத்தைப் பண்ணை எனவும், பண்ணைச் சூடம் எனவும் சித்தர்கள் ஆண்டுள்ளனர். பண்ணியாரம், பண்டம் முதலிய பொருள்களைக் குறிக்கும் அச்சொற்களும் 'பண்' என்னும்வேரில் நின்றும் தோன்றியனவே.

எனவே, அறியாமை ஒழுங்கின்மை முதலிய தீக்குணங் களைக் கல்வியால் தோண்டி எறிந்து அன்பு நாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையாதியவற்றைத் தம் உள்ளத்துப் பெய்து தம் அறிவொழுக்கங்களை நிறைவு செய்தலால் தம்மைத் திருத்தியமைப்பதே பண்பாடாம். ஒரு நிலம் சில நாளிலே திருத்தியமைக்கப்படுவதில்லை; பல திங்கள் செல்லும். ஒருவன் சில திங்களிலே இசையைச் சரிப்படுத்துப் பண்ணிசையான்; அவனுக்குப் பல திங்களின் பயிற்சி இன்றியமையாது வேண்டப்படும். அவ்வாறே ஒரு மொழி பேசும் நாட்டார்க்குத் திடீரெனத் தோன்றுவதன்று பண்பாடு. பன்னூறாண்டுகள் தாம் திருந்த ஒழுகிய ஒழுக்கத்தால் அவரிடம் அஃது அமைவதாகும்.

எனவே அடிப்பட்ட பழக்க வழக்கத்தால் திருத்தமுற்ற நயப்பாட்டுப் பெருமைக்குணமே பண்பாடு என்னும் சொல்லால் உணர்த்தப்படுவதாகும். இச்சொல்லை இப்பொருளில் அறிவுருவாகிய மாணிக்கவாசகனார் தம் திருவாசகத்தில் "பண்பட்ட தில்லை" என ஓராயிரம் ஆண்டுகட்கு முன்னரே ஆண்டருளினர்.

ஆங்கில மொழியில் நிலத்தினைத் திருத்திப் பண்படுத்துதலைக் கல்டிவேஷன் (Cultivation) என்பர். அதன் வேர் (Root) "கல்ட்" (Cult) என்பது. இச்சொல் உழுதல் என்னும் பொருளையுணர்த்தும். நிலம் பண்படுத்தப்படுவதற்குச் சிறந்த காரணமாக அமைந்தது உழுதலே. எனவே உழுதல் என்பது பண்படுத்தலை உணர்த்தி நிற்கின்றது. இந்தக் கல்ட் (Cult) என்னும் வேரிலிருந்தே 'பண்பாடு' 'பண்பட்ட' என்னும் பொருளையுணர்த்தும் "கல்ச்சர்" (Culture) "கல்சர்ட்" (Cultured) என்னுஞ் சொற்கள் தோன்றின.

பழந்தமிழர் பண்பாடு.

பண்பாடு என்னும் மாளிகையைத் தாங்கி நிற்கும் தூணாகிய குணங்கள் சிலவற்றில் பண்டைத் தமிழர் சிறந்திருந்ததனைப்பற்றிச் சுருங்கக் கூறுவேம். எண்பதம் என்னும் குணமே பண்பாட்டில் தலைசிறந்த குணமாகும். இது யாவரிடத்தும் எளிய செவ்வியராய்க் காணப்படுதலாம் அரசாள்வார்க்கும் (governor)

அலுவலகத்தார்க்கும் (officers) இக்குணம் இன்றியமையாது வேண்டப்படுவது. இக்குணம் உடையார் இன்முகத்தினராயும், இன்சொற் பேசுபவராயும் கடுஞ்சொற் கூறுதவராயும் திகழ்தல் வேண்டும் இது கருதியே தெய்வப் புலவர் வள்ளுவனுர்,

"காட்சிக் கெளியன் கடுஞ்சொல்லன் அல்லனேல்
மீக்கூறும் மன்னன் நிலம்" என்றும்,

"எண்பதத்தால் எய்தல் எளிதென்ப யார்மாட்டும்
பண்புடைமை என்னும் வழக்கு"

என்றும் கூறியருளினர்.

மலையமான் திருமுடிக்காரி என்னும் பெயரினன் இற்றைக்கு 1800 ஆண்டுகட்கு முன்பு தமிழ் நாட்டில் வாழ்ந்த குறுநில மன்னருள் ஒருவன். இவன் தன்னைக் காணவருபவர் எந்நாளினும் வந்து, தன் செல்வியறியாது எத்தகைய கடுமொழி கூறினும் அவர் தம் குறைகளைக் கேட்டு அவர் விரும்பியவற்றை இன்மொழி இயம்பி அளிப்பன்.

"நாளன்று போகிப் புள்ளிடை தட்பப்
பதனன்று புக்குத் திறனன்று மொழியினும்
வறிது பெயர்குநர் அல்லர் நெறிகொளப்
பாடான்று இரங்கும் அருவிப்
பீடுகெழு மலையற் பாடி யோரே" என்னும் புறப்பாட்டு இவ்வரலாற்றைப் புகல்கின்றது. கணவனை இழந்த கண்ணகி அரசனைக் காணல் வேண்டித் தான் அவன்தன் கடை வாயிலில் நிற்பதனை அவனுக்கு வாயிற் காவலனுற் கூறுவித்தவுடன் காலத்தாழ்ப்பின்றி, "வருக மற்றவட் டருக ஈங்கு" என மன்னவன் தென்னவன் கூறினுன்; அவளொடு எளிதில் உரையாடினுன். இவ்வெடுத்துக்காட்டுகளினுல் தமிழரசரே காட்சிக்கெளியர் கடுஞ்சொல்லர் அல்லர் என்பது பெறப்படுதலின் அரசரல்லாத ஏனையோரின் எண்பதவியல்பினைப்பற்றிக் கூறல் வேண்டியதில்லை.

நற்குடிப் பிறப்புடைமை அன்புடன் பின்னிக் கிடப்பது பண்பாட்டிற்கு ஒரு உறுப்பாம் எனத் தெய்வப்புலவர் கருதுகின்றனர். வழிவழிவந்த அறிவும் ஒழுக்கமும் குடிப்பிறந்தா

ரிடத்துக் குன்றின் மேலிட்ட விளக்குப்போல அமைந்து கிடப் பன. தம்மை நோக்கி வருபவரை எழுந்து எதிர்சென்று வர வேற்றலையும், அவர்களை அனுப்பிவைக்கும்போது சிறிது வழி அவருடன் சென்று, அவர்கள் தம்மைப் போகப் பணித்த பின்பு திரும்பி வருதலையும் குடிப்பிறந்தார் சிறந்த பண்பாடாகக் கொண்டிருந்தனர். இதனை "இருக்கை எழலும் எதிர்செலவும் ஏனை விடுப்ப ஒழிதலும்........" குடிப்பிறந்தார் செயல் என்று நாலடி கூறுகின்றது.

"ஏழடிப் பின்சென்று கோலின்
தாறுகளைந்து ஏறுஎன்று ஏற்றி" என்று பொருநர் ஆற்றுப்படை புகல்கின்றது. இத்தகைய நற்செயல்கள் அன் புடைமையைத் தாங்கி வருகின்ற நற்குடிப் பிறந்தவர்தம் பண் பாடுகள் என்று அறிஞர் கருதுகின்றனர்.

பண்பாடமைந்த பழந்தமிழர் பிறரை யிகழ்ந்து கூறுதலை அறியார். எஞ்ஞான்றும் சிரித்த முகத்தினராகத் திகழ்ந்தனர். நீதியையும் அறத்தினையும் விரும்புதலால் தமக்கும் பிறர்க்கும் நலத்தினைச் செய்துகொண்டனர். தம் வாழ்க்கை பிறர் நலத் திற்கு இடையூறாகவும், தடைபாடாகவும் இருக்குமாறு ஒரு நாளும் இருந்தனரில்லை. தீயவை செய்தாரிடத்தும் கண்ணோட் டம் காட்டி அவருடைய பிழைகளைப் பொறுத்தனர். அன்றியும் இன்னா செய்தார்க்கும் இனியவே செய்தனர். தஞ்செல்வத் தினை நல்வழியிற் செலவழித்துப் பலர்க்கும் பயன்படுத்தினர். சுருங்கக் கூறின் தமக்கென வாழாப் பிறர்க்குரியாளராய் விளங் கினர். இவர்தம் வாழ்க்கைக்குக் கோப்பெருஞ்சோழன், பிசி ராந்தையார், பாரி கபிலர், பாண்டியன் அறிவுடைநம்பி, கரிகாற் பெருவளத்தான், கடலுள் மாய்ந்த இளம் பெருவழுதி முதலா னோரின் வரலாறுகள் சான்றாக இன்னும் நிலவி நிற்கின்றன.

பண்பாட்டினை மக்கட்பண்பு எனக்கூறி அரம்போலும் கூரிய அறிவுடையராயினும் மக்கட் பண்பாகிய இளகுதற் குண மில்லாதவரை மரம் என்றே வள்ளுவர் கூறியிருக்கின்றார். இத னால் தம் வாழ்நாளை மாந்தரின் நன்மைக்குப் பயன்படுத்துபவரே சிறந்த பண்பாடுடையராவர் என்பது பெறப்படுகின்றது. இத் தகைய பண்பாட்டினை ஆங்கிலர் தம் மொழியில் 'Humanism' எனப்புகல்வர்

புறநானூற்றுப் புலவருள் தமிழின்பம் அறிந்த தலைமகன், பலநன்னீர்மைச்செல்வன், சிறிய பருவத்தே பெரிய அறிவினைப் பெற்றவன், தமிழர் பொருட்டுக் கடலுள் மாய்ந்ததென்னவன் கூறிய செய்யுளொன்றிற் கூறப்பட்டுள்ளவை தமிழர் பண்பாட்டிற்குச் சிறந்த காட்டாக உள்ளன.

"சிறந்த உணவாயினும் தமியராயுண்ணுது பிறரொடு கலந்துண்ணுதல், வெறுப்பின்மை, மடியின்றிச் சுறுசுறுப்புடையராய் ஒழுகுதல், பழிக்கஞ்சுதல், உயிரைக் கொடுத்தும் புகழைப் பெறுதல், உலகம் முழுவதனையும் பெறுமிலை எய்தினும் பழியைப் பெறவிழையாமை, அயற்சியின்மை, தமக்கென வாழாமை, பிறர்க்கென வாழுதல்" என்னும் இவை அவராற் கூறப்பட்டன. இத்தகைய குணங்களையுடையவர் இருத்தலாற்றான் உலகம் விளங்கிவருகின்றது என அவர் கூறினர். "பண்புடையார்ப் பட்டுண்டுலகம் அதுவின்றேல் மண்புக்கு மாய்வது மன்" என்று தெய்வப்புலவர் இளம்பெருவழுதியின் கருத்துத் தோற்றத்திற்கு விதையுதவினர்.

தெய்வப் புலவரின் இவ்வருமைத் திருக்குறளுள் பிந்திய பகுதி கழிவிரக்கந் தோன்றக் கூறியிருத்தலை ஒளித்துவைத்து உய்த்துணர்வார்க்கு ஒருவாறு காட்டி, "பண்புடையார்ப் பட்டுண்டுலகம்" என்னும் கருத்தமைந்த மங்கலத் தொடரைப் பெரும் படமாக வரைந்து

"உண்டால் அம்ம இவ்வுலகம், இந்திரர்
அமிழ்தம் இயைவ தாயினும் இனிதெனத்
தமியர் உண்டலும் இலரே; முனிவிலர்;
துஞ்சலும் இலர்;பிறர் அஞ்சுவது அஞ்சிப்
புகழ்எனின் உயிரும் கொடுக்குவர்; பழிஎனின்
உலகுடன் பெறினும் கொள்ளலர்; அயர்விலர்;
அன்ன மாட்சி அனையர் ஆகித்
தமக்கென முயலா நோன்றாள்
பிறர்க்கென முயலுநர் உண்மையானே"

(கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி—புறம் 182) என்னுஞ் செய்யுளை நமக்குத் தந்த பழந்தமிழன்; பண்பாடறிந்தொழுகியவன்; பன்னீர்ச் செல்வன் பெயர் வாழிய.

சென்ற இதழின் தொடர்ச்சி.

கரந்தைக் கோவை.

[வித்துவான் ச. பாலசுந்தரம்.]

தலைவி முன்னிலைப் புறமொழி மொழிதல்.

146 கொங்கிருக் குந்தமிழ் சேர்கரந் தைப்பொழில் கூடிமகிழ்
துங்கரிக் கொத்தசொல் தாம்துறந் தால்வரும் துன்புணரார்
அங்குரிக் குந்துயர் ஆற்றுவர் என்றுரை ஆடுவது
பொங்கரிக் கஞ்சியப் பொல்லாப் புலிக்குகைப் போந்ததொப்பே.

இதுவுமது.

முன்னம் பலமொழி மோதிய தாற்றுயர் மூண்டிருக்குந்
தென்னந் தமிழ்நிலத் திந்தியைச் சேர்ப்பவர் சீருரைபோல்
பின்னுங் கழற்றுரை பேசுவோர் அன்பின் பெருமையினை
உன்னும் உளங்கரந் தைப்பொழில் வாய்விரைந் தோடியதே.

தலைவி பாங்கியொடு பகர்தல்.

147 சுடருந் தணற்குத் துணையாம் வளிப்பின் சுருங்கியபோ
திடரும் அதுசெயல் போலெனக் கின்பமும் ஈந்தயலே
படரும் பொழுதவர் பைங்கணுந் தந்தனர் பைந்தமிழோர்
தொடருங் கரந்தையிற் றேன்றமிழ் தொக்குநற் றூமொழியே.

தலைவியைப் பாங்கி அச்சுறுத்தல்.

148 கல்லாத பேர்க்கருள் செய்யுங் கரந்தைக் கடிபுனத்தில்
இல்லாத ஏனல்நம் அன்னைக் குணர்த்திடி னிங்குறுதல்
செல்லாது, நின்னிலை தேரின் மனையகத் தேசெறிப்பாள்
பொல்லாது கற்பினுக் கெல்லா இனித்துயர் போற்றுகவே.

---

146. கொங்கு—தேன். துங்கர், இக்கு, ஒத்தசொல்—தலைவர் கரும்பு போன்று சொல்லிய சூளுரை. அங்குரிக்கும் — தோன்றும். பொங்கரி—அரியேறு. கழற்றுரை—இடித்துரை. 147. பெரு நெருப்பிற்குத் துணையான காற்றுச் சிறு சுடருக்குப் பகையாத லின் இவ்வாறு கூறினுள். பைங்கண் —துன்பம். அமிழ்து—தமிழ். 148. இல்லாதஏனல் — பறவைகள் கவர்ந்தநிலை. உறுதல்—காவல் செய்தல். எல்லா—தோழிமுன்னிலைப் பெயர்.

நீங்கற் கருமை தலைவி நினைந்திரங்கல்.

149 பாவையங் கண்ணைவிட் டேகுதல் காணலன் பைங்கரந்தைக்
கோவையு மென்னையுங் கூட்டிப் பிரித்திடுங் கொள்கையுறு
தேவையெங் கண்முனர்க் காட்டுவ ரேல்வழி தேர்ந்திடுவேன்
பூவையெங் கேமணம் போக்கிப் பிரியுமிப் பூதலத்தே ?

தலைவிக் கவன்வரல் பாங்கி சாற்றல்.

150 திருந்தார் உளங்குழை வாக்குஞ் செழுந்தமிழ் சேர்கரந்தை
இருந்தார் இசையுமின் பும்பெறல் போலநம் இன்றலைவர்
வருந்தேர் மணிக்குரல் கேட்டவிவ் வார்செவி வாழ்க!இனி
முருந்தார் முறுவலை நீமுகிழ்த் தாலென்ன மொய்குழலே?

தோழி சிறைப்புறமாகச் செறிப்பறிவுறுத்தல்.

151 விரிக்கின்ற செந்தமிழ் மேவுங் கரந்தை வியன்புனத்தில்
சிரிக்கின்ற வேங்கைகண் டேநமர் சேர்ந்தார் தினையரிய
பரிக்கின்ற காவலும் நீங்கினம் பூவையும் பைங்கிளியும்
உரைக்கின்ற சொல்லினுக் கொப்புமை இல்லென் றுவந்திடுமே

தோழி தலைமகற்கு முன்னிலைப் புறமொழி மொழிந்தறிவுறுத்தல்.

152 தேட்டம் விளைக்கின்ற செந்தமிழ்ப் போற்றித் திகழ்கரந்தை
ஆட்டம் பயில்மஞ்ஞை காள்!இசை கற்ற அருங்குயில்காள்!
ஈட்டுந் தினைகொய ஈண்டினர் கானவர் ஏகுவம்யாம்
வாட்டங் கொளீர்மற வீர்!எமை அன்பர் மறப்பினுமே.

பாங்கி தலைமகன் முன்னின் றுணர்த்தல்.

153 அணியார் செழுந்தமிழ் ஆளுங் கரந்தை அருட்டலைவ!
கணியார் தரும்பொனிற் கானவர் ஏனற் கதிரரியும்
பணியார்ந் தனர்,பரன் காவலு நீத்தனள் பாவையினி
மணியார் மனைபுகு வாள்வழங் காளிவ் வறுங்களத்தே.

பாங்கி முன்னின் றுணர்த்தி ஓம்படை சாற்றல்.

154 ஊற்றுய் வளர்தமிழ் ஊறுங் கரந்தையில் ஓங்கிறைவ!
ஏற்றுள் தனக்குயி ரானினைக் கோமகள் இந்நிலையை
ஆற்றுள் அவள்மனைச் சேய்மையும் அன்றுநீ ஆங்குவரல்
மாற்றுய் அடைக்கல மானுரை என்றும் மறவற்கவே.

---

149. கோவை—தலைவனை. தேவு—பால்வரை தெய்வம்.
150. முருந்து—மயிலிறகின் அடி. 151. சிரித்தல்—மலர்தல். பரிக்கின்ற—தாங்குகின்ற. 152. தேட்டம் — அறிவாகிய பொருள். ஈட்டும்—விளைந்து முற்றும். 153. கணியார்—வேங்கைமரம். பொன்—பொன்போன்ற மலர். மணியார்—கூலப்பொருளும் செல்வமும் நிறைந்த. வழங்கல்—வருதல்.

கிழவோன் தஞ்சம் பெருது நெஞ்சொடு கிளத்தல்.

155 வேங்கை துரத்தினும் வெல்லுவன் நெஞ்சே! விரைமலர்சேர்
வேங்கை துரத்துதற் கென்செய்வ தின்பம் விளை தமிழின்
பாங்கை அறிந்தவர் வாழ்கரந் தைப்பதிப் பாவைஎனை
நீங்கை அறிந்தபின் னிவ்வுயிர் நீங்குதல் நேர்ந்திலனே.

12. பகற்குறி இடையீடு.

இறைவனைப் பாங்கி குறிவரல் விலக்கல்.

156 நால்வர் தமிழ்தெரி நாவார் கரந்தை நறும்புனத்தில்
பால்வந் திருந்தினைப் பைங்கதிர் முற்றிய பான்மையிற்,பல்
கால்வந் தனை நனி கண்டுசெல் வாளெமைக் காணவினி
மேல்வந் திடருறல் வேண்டலம் யாங்கதிர் வேலவனே.

இறைவியைப் பாங்கி குறிவரல் விலக்கல்.

157 சிந்தனைக் குஞ்செவிக் கும்மமிழ் தாகிய செந்தமிழைத்
தந்தினிக் குங்கரந் தைப்புனம் மேவுநம் தாய்விளை ந்த
செந்தினைக் காண்பது போலுனைக் காண்பதைத் தேரினது
நிந்தனைக் கேதினை வாங்குறி செல்லுதல் நீங்குகவே.

இறைமகள் ஆடிடம் நோக்கி அழிதல்.

158 அறிவுக் கமிழ்தமும் ஆக்கமும் சேர்க்கும் அருந்தமிழைத்
திறமிக் குணர்ந்துபின் செல்வோர் கரந்தையைச் சிந்தைசெயா
ருறவுக் கெனையெடுத் தொப்புமை காட்டுமிவ் வொண்புனமும்
நறவுப் பிழிமலர்ச் சோலையும் மஞ்ஞையும் நவ்வியுமே.

பாங்கி ஆடிடம் விடுத்துக்கொண்டகறல்.

159 விழாத்தொறும் நூல்வெளி யாக்கியென் றென்றும்விரிவுரைசெய்
குழாத்தொடு தொண்டுசெய் தோங்குங் கரந்தைக் குளிர்புனம்
டழாத்துய ரோடெமர் ஆணையிற் சேறலை அன்பர்வரின் [விட்
தழாத்தொட ராயின மென்றுரை சாற்றுவிர் தத்தையரே!

பின்னுள் நெடுந்தகை குறிவயின் நீடுசென்றிரங்கல்.

160 ஈடும் எடுப்புமில் யாழ்நூல் அளித்திங் கிசைவளர்த்து
நீடும் கரந்தையின் நெஞ்சிடம் கொண்டவர் நேற்றுவரை
பாடுங் குரல்மடுத் தாய்சுர புன்னை!இப் பாவியினைத்
தேடும் படிவிடுத் தாரெவண் தோன்றுவர்? செப்புகவே.

---

155. வேங்கை—புலி. நீங்கை—நீங்குதல்.
156. அனை—அன்னை, 157. நிந்தனை—இற்செறிக்கும் நினைவு.
159. தழாத்தொடர்—நிலை மொழியும் வருமொழியும் நேரே பொருந்தாத தொடர். 160. இன்—உவமவுருபு.

தலைவன் வறுங்களம் நாடி மறுகல்.

161 பரிந்தார் வமிக்குப் பசுந்தமிழ் நூல்செயும் பாவலரைத்
தெரிந்தார் கரந்தைச் செழும்புனத் தேவார் தினைக்குரலை
அரிந்தார் களென்ற னுடம்பரி யாமலென் னுவிசெலப்
புரிந்தார் களிங் கிதண் என்மனம் போலொளி போயினதே.

குறுந்தொடி வாழூர் நோக்கி மதிமயங்கல்.

162 சேனு வரைய ருரையைக் கரந்தையிற் சேர்ந்தறியார்
யானு வறிகுவன் என்றுதொல் காப்பியர் யாப்பறியார்
போனு னறிகுவன் என்றனைப் பொன்னூர்ப் புகுநெறியை
ஏனோ மயங்கியின் றென்பால் வருந்தினை ஏழைநெஞ்சே.

13 இரவுக்குறி.

இறையோன் இருட்குறி வேண்டல்.

163 மாகம் பசப்புற மாமலை ஏறினன் வான்கதிரோன்
மேகம் இருணிறம் மேவிய தாலினி மெல்லியலே!
பாகும் கசந்திடும் பைந்தமிழ் சேர்கரந் தைப்பதிநான்
போகும் வழியறி யேன்விருந் தாகப் புகுவதெங்கே?

பாங்கி நெறியின தருமை கூறல்.

164 கலைசூழ் தரவறங் காக்குங் கரந்தையிற் காவலனே
மலைசூழ் நெறிவரி நாகம் வழங்கும் வனங்கடொறும்
கொலைசூழ் விலங்கினம் கூடித்திரியும் குறவர்களேம்
நிலைசூழ் நகர்நெடுங் கங்குல் வருதல் நினக்கரிதே.

இறையோன் நெறியின தெளிமை கூறல்.

165 அறத்துறை நூல்பல செய்கரந் தைப்பதி ஆசிரியர்
மறத்துறை நூல்பயின் றேன்படை வாய்த்தனன் மாண்பகைவர்
நிறத்துறை வேல்வல னும்விலங் கூர்வன நேர்ந்திடிலென்
புறத்துறை கொள்வதல் லாற்புரி யாமிறை பூங்குழலே.

பாங்கி அவனுட்டணியியல் வினுதல்.

166 நாவலர் வேங்கட சாமிநாட் டாரின் நலங்கமழ்நூல்
பாவலர் சோலைக் கரந்தையிற் பாவையர் பாடிமகிழ்
பூவலர் காவும் புனைமலர் சாந்தமும் பூணணியும்
கோவல னேவிளை யாடிடம் யாவையும் கூறுகவே.

---

161. பரிவு — அன்பு. தெரிந்தார் — ஆய்ந்தமைத்துக்கொண்ட. இதண் — பரண். 162. தொல்காப்பியர் யாப்பறியார் — தொல்காப்பியரின் கருத்தை அறியமாட்டார். போனுனறிகுவன் — போல்நான் அறிகுவன். பொன் — தலைவி. 163 மாகம் — திசைகள். 165. படை — போர்க்கருவிகளைப் பயன்படுத்துந்திறன். மிறை — தீங்கு.

தலைவன் அவளுட்டணியியல் வினாதல்.

167 நாட்டார் புகழுங் கவிவேங் கடாசலம் நாநலத்தை
வேட்டார் கரந்தையில் மேவுந் தமிழ்போல் விளங்குவீர்எம்
நாட்டார் அணியியல் நீர்நாடி யாவதென்? நங்கையர்நும்
நாட்டார் நயந்தவை கூறின் நமக்காம் நலந்தருமே.

இதுவுமது.

வேண்டாப் பொருளை விலைகேட்ப தொக்கும் விரும்பெமதூர்
நாண்டாங் கியல்மட வாரணி நாடியென் நற்கரந்தைத்
தூண்டா விளக்கனை யாய்நின தூர்வளர் தோகையரின்
பூண்டாங் கியல்மகிழ் பூம்பொழில் கூறின் புகும்பயனே.

அவற்குத் தன்னுட்டணியியல் பாங்கி சாற்றல்.

168 விழியென் றிருந்தமிழ்க் காக்குங் கரந்தையில் வேளனையாய்!
செழியன் திரைவளர் முத்தமும் தேமாத் திகழ்தழையும்
கழியன் புறுமலர் காந்தளும் சூடிகற் கண்டுகைக்கும்
மொழியின் விளங்குமெந் தோகையர் ஆடுவர் மொய்ம்பொழிலே

இறைவிக் கிறையோன் குறையறி வுறுத்தல்.

169 படையா தெழுந்தமிழ் பாலித் தெழில்மிகு பைங்கரந்தைத்
தொடையார் கவிநலம் போலுநற் றேகை!உன் தோள்விருப்பால்
உடையார் விலங்கணங் கூர்வன வற்றினூ ரேரகிலார்
இடையா மமேவரற் கெண்ணினர் செய்வதென் ஏந்திழையே.

தலைமகள் நேராது நெஞ்சொடு கிளத்தல்.

170 ஊதை மலியிருள் யாமத் துறுபுலி ஊரரவம்
கோதைத் தருநெறி கோமக னவரக் கூறினளால்
மேதைக் கிலக்கிய மாவார் கரந்தை வியன்புலவர்
பேதைக் கிலக்கியம் பெண்ணெனல் யாதும் பிழையிலையே.

இதுவுமது.

தஞ்சம் புகுந்தவர் தாயாம் கரந்தைத் தமிழறியார்
வஞ்சம் பொருமை வலிவழக் கையம் வளர்ப்பவர்கள்
நெஞ்சம் புரையிருள் நேயத் தவர்வர நேர்ந்தவரூர்
நஞ்சும் கொலைமலி நாகமும் சூழ்நெறி நாடலரே,

167, வேட்டார் — விரும்பி அமைத்துக்கொண்ட. நாண் தாங்கும் இயல் – பூண் தாங்கும் இயல்–அணியியல். திரை–கடல்.

169. உடையார்–தலைவர். அணங்கு-சூர். ஊறு - துன்பம்

170, ஊதை–மிகுபனி. கோதுஐ-துன்பத்தை, நெறி–வழி. புரை— ஒக்கும், ஊர்நஞ்சு-பாம்பு; நாகம்–யானை.

நேரிழை பாங்கியொடு நேர்ந்துரைத்தல்.

171 பாலுந் தியதமிழ்ப் பாவார் கரந்தைநற் பாவலர்போல்
நாலுந் தெரிந்தவ ரேநயந் தார்வர நள்ளிருளில்
சேலுந் தியவிழிச் செந்திரு வேயினிச் செப்புதற்கு
மேலுந் தெரிந்தில னேவிடை உள்ளமும் மேவியதே.

நேர்ந்தமை பாங்கி நெடுந்தகைக் குணர்த்தல்.

172 தேமாப் பலாச்சுளை வாழையின் தீங்கனி சீனிகற்கண்(டு)
ஆமாப் பொழியும் அமிழ்துடன் தேன்கலந் தாம்சுவைபின்
போமா றினிக்கின்ற செந்தமிழ்ப் பாக்கள் பொழிகரந்தைக்
கோமான்! குறையிரந் தேன்மலர்ந் தாள்முகக் கோமளமே.

குறியிடை நிறீஇத் தாய்துயி லறிதல்.

173 தென்றற் பொதியத் திருந்தவன் தேர்ந்த செழுந்தமிழை
மன்றத் திருத்திய மாண்கரந் தையன மாமகளே!
குன்றத் திருங்கரி கொள்பகை யோடுநங் கொல்லையிலே
துன்றிப் பொருமொலி கேட்டனை யோபுவி தூங்கிருளே.

இறைவிக்கு இறைவன் வரவறி வுறுத்தல்.

174 முப்பெருஞ் சங்கமும் மூவேந்தர் தாமும் முயன்றளித்த
செப்பருஞ் செந்தமிழ்ச் சீர்வளர்த் தின்பந் திகழ்கரந்தைக்
கொப்பெனுங் காரிகை!உன்விருப் பால்நெறி ஊறகற்றிக்
கப்பிருள் வந்தார் கடிபுனல் நம்மைமுன் காத்தவரே.

பாங்கி தலைமகளைக் குறியிடத்துக் கொண்டுசேறல்.

175 இறவாக் கவிஇளங் கோவெழிற் சாத்த னியம்பிய சொல்
மறவாக் கருத்தினர் வாழுங் கரந்தைநம் மன்னருனை
உறவாக் கொளவுயர் சோலையின் ஊடார்ந் துயங்குவரால்
நறவாக் கியதொடை யாய்விருந் தாகநீ நண்ணுகவே.

பாங்கி தலைமகளைக் குறியிடத்துய்த்து நீங்கல்.

176 மொழியைப் பரப்புங் கரந்தையைப் போல்வாய்! முறுவலுக்குப்
பழியைத் தரும்வன முல்லையைச் சென்று பறித்திரு,நான்
விழியை இதழை வெறுக்கின்ற நீலம் விரிகுமுதம்
பழியை அழிக்கப் பறித்தே வருகுவன் பைந்தடத்தே.

---

171. உள்ளமும் மேவியது—என் மனம் அவரை விரும்பியது.

172. ஆமா — காட்டுப்பசு. அமிழ்து—பால். பின்போமாறு — சுவைகுறையுமாறு. இருந்தவன்—அகத்தியன். கரந்தையன— கரந்தையைப்போன்ற.

176. பைந்தடத்தே சென்று பறித்துவருவேன் எனக்கூட்டுக,

(தொடரும்)

சென்ற இதழின் தொடர்ச்சி.

புயல்.

ஆசிரியர்: **செகப்பிரியர்.**

மொழி பெயர்ப்பாளர்: புலவர். **R. ஏகாம்பரநாதன்.**

அங்கம்—3. களம்—3.

தீவில் மற்ருேரிடம்—இராசேந்திரன், இராசசிம்மன், அமணன், கோவிந்தமாருர், ஆதிநாராயணன், பராந்தகன் மற்றும் சிலர் வருதல்.

கோவிந்தமாருர் :— என்னுல் இனி ஒரு அடிகூட எடுத்து வைக்கமுடியாது. நாம் இதுகாறும் நடந்த தூரம் கணக்கிட முடியாத நீளம் இருக்கும். ஆனுல் வழியோ சுற்றிச் சுற்றி இங்கேயே வருவதால் தொடங்கிய இடத்திலேயேதான் நாம் இருப்பதாகத் தோன்றுகிறது. இனி என்னுல் நடக்கமுடியாது. எனது தோலின் கிழத்தன்மையை நீங்கள் அறிவதைக்காட்டிலும் எனது எலும்புகளின் கிழத்தன்மையை இப்போது நான் நன்கு உணர்கிறேன். எல்லாம் நொறுங்கிவிடும்போல் தோன்றுகிறது.

இராசேந்திரன் :— எனது நிலைமையும் அப்படித்தான். ஆனுல் எப்படியும் வீரராசேந்திரனைத் தேடிப் பிடிக்கலாம் என்ற நம்பிக்கையில் சுற்றினேம். அவன் கிடைக்கப்போவதில்லை. நம்பிக்கைகொண்டுள்ள நம்மைப் பார்த்துக் கடல் இகழ்ந்து சிரிக்கிறது. கமலத்தை இரங்கூனில் இழந்தோம். இன்று கடலில் வீரராசேந்திரனையும் இழந்தோம். கரையிலும் இழப்பு, கடலிலும் நமக்கு இந்த நிலையா? மிகவும் களைப்பாக இருக்கிறது.

அமணன் :— (இராசசிம்மனிடம் — மறைவில் கூறுதல்) எடுத்த காரியம் உடனே முடியாவிட்டால் கோழை துறவியாகக் கூட ஆகிவிடுவான். நாம் முயன்ருல் பலிக்காமலா போகும். முயன்ருகிவிட்டது. இனி முடித்துத் தீர்க்கவேண்டுமல்லவா?

இராசசிம்மன் :— அதைப்பற்றி மிகுதியாகச் சித்தித்தமையால் என்னையே நான் மறந்திருந்தேன். சமையம் ஏற்படும்போது கவனமாகக் காத்திருந்து முடிக்கவேண்டியதுதான்.

அமணன் :— இன்றிரவே முடிக்கவேண்டியதுதான். அவர்கள் நடை மெலிந்து சோர்வுற்றிருக்கின்றனர். இந்த வாய்ப்பு நமக்காகவே ஏற்பட்டிருக்கின்றது.

இராசசிம்மன் :— இற்றைக்கு நிச்சயமாக முடித்துவிடு வோம்.

(அப்போது திடுமென அங்கு இசையரங்குடன் ஒரு பெருஞ்சோற்று விழா நிகழ்கிறது. தூக்கத்திலிருந்த மக்கள் அனைவரும் எழுப்பப்படுகின்றனர். பற்பல உருவங்கள் எண்ணற்ற பண்டங்களைப்பரிமாறி யாவரையும் விருந்தோம்புகின்றன.)

இராசேந்திரன் :— ஆகா அரிய பாடல். இனிய இசை; யாவரும் கேளுங்கள். நண்பர்களே நோக்குங்கள். மதிக்கமுடியாத உண்டி. எண்ணற்ற உணவுப் பண்டங்கள். என் உடலும் உயிருமாக இருந்த என் மக்களில் நம்பிக்கையிழந்த நான் இவற்றையெல்லாம் நம்புவதா? இவை உண்மைதானா?

கோவிந்தமாரூர் :— நானும்தான் காண்கின்றேன். நான் இனி எதையும் நம்புவேன். நம்பிக்கை இல்லை என்ற ஒன்றைத் தவிர மற்ற யாவற்றையும் நம்புவேன். ஒற்றைக் கொம்புக் காட்டு மிருகம், அரேபியப் பாலைவனம், பச்சைமரம், தன்னை எரித்துக்கொண்ட பறவை, மீண்டும் தானே குஞ்சாய்த் தோன்றுதல் இவற்றையெல்லாம் நான் நம்புவேன்- மெய்யான உலகில் பொய்யே இல்லை— நம்பாதவன் என்னிடம் வந்தால் அவனை நம்பும்படி உடனே செய்வேன். என்னைப் பார்த்தவன் எதனையும் நம்பித்தான் ஆகவேண்டும். நாடோடிகள் பல விந்தைகளைக் கூறுவார்கள். திண்ணைத் தூங்கிகளும், சோம்பேறிகளும் அவற்றை நம்புவதில்லை. நாடோடிகள் பொய் சொல்வதில்லை. அவர்கள் கண்ணில் எவ்வளவோ படுகின்றன. அவற்றை நம் பச் சோம்பேறிகளுக்கு மனமும் இல்லை, அறிவும் இல்லை. அக் குறை யாரைச் சேரும்? நம்பாதவர் நம்முன் வருதல் வேண்டும்; வந்தால் எல்லாம்..........

அமணன் :— நாம் இங்கு பார்த்தவற்றையெல்லாம் நாகை சென்று மக்களிடம் கூறினால் நம்புவாரா? கடலின் நடுவில் ஒரு

தீவு உளதென்றால் நம்புவாரா? அத்தீவில் காற்றில் உலவும் காத்தவராயர் உண்டென்றால், காற்றே உயர்ந்த இசையரங்கு நடத்துகிறதென்றால்—விண்ணிலிருந்து எண்ணற்ற பண்டங்கள் வருகின்றன போகின்றன என்றால் விலையில்லாமல் எல்லாப் பொருளும் இனமாக யார்யாரோ வந்து உதவுகின்றனர் என்றால் யார் நம்புவர்?

இராசசிம்மன் :— என்றால் இவற்றை நம்பவே முடியாது; எடுத்த காரியத்தை நம்பிக்கையோடு முடிப்பதற்கு நம்பிக்கையான சூழ்நிலை பெறும் நம்பிக்கையற்ற நான் இவற்றையெல்லாம் எப்படி நம்புவேன்? நம்ப முடியாது.

கோவிந்தமாறர் :— நீங்கள் மூவரும் நம்பிக்கையின்றி உளறவேண்டாம். நாம் அனைவருக்குமே பசி மிகுந்திருக்கிறது. பண்டங்கள் நிறைய இருக்கின்றன. எடுத்துண்ணலாமே? ஏன் அச்சம்? சாப்பிடுங்கள்.

(யாவரும் உண்ணத் தொடங்குகின்றனர்—இராசேந்திரன்-இராசசிம்மன்—அமணன் மூவருடைய உணவுகள் மட்டும் சிதறுகின்றன. கைக்கெட்டியது வாய்க்கு வாராமல் துன்புறுகின்றனர். இழிநிலையடைகின்றனர்.)

விண்ணிலிருந்து காத்தவன் பேசுதல் :— நீங்கள் மூவரும் கொடியவர்கள். பாவிகள். உங்கள் மனம்போல் உங்கள் நிலையும் அமைய வேண்டியதுதான். நம்பிக்கையற்றவர்கள், துரோகிகள், சதிகாரர்கள். நீங்கள் உயிருடன் இருக்கத் தகுதியற்றவர்கள். ஆதலால்தான் மக்கள் வாழும் இடத்தில் நீங்கள் இல்லை. இத்தீவில் இருக்கிறீர்கள். நீங்கள் சாகவும் புண்ணியம் செய்யாதவர்கள். இப்பெரிய கடல் உங்களை உள்ளே வைத்துக் கொள்ள இசையாமல்தான் இங்கு ஒதுக்கிவிட்டது. நீங்கள் தற்கொலை செய்துகொண்டால்கூட உங்கள் உயிரைப் போக்க எந்தக் கருவியும் உங்களுடன் ஒத்துழைக்காது. கோவிந்தமாறர் மிகவும் நல்லவர். அவருக்கு எதிலும் நம்பிக்கையுண்டு. அவர் உணவில் சிதைவில்லை. அவர் வாழ்வும் அவர் மனம்போல் நன்கு அமையும். அவர் வாழ்வாராக.

(இராசேந்திரன்—இராசசிம்மன் இருவரும் கத்தியை உருவிக்கொண்டு ஏ, காற்றே உன்னை வெட்டுவேன் என்றனர்.)

விண்ணிலிருந்து காத்தவன்:— ஏ சதிகாரர்களே நாங்கள் உங்களின் தலைவிதியின் பேரால் பாபத்தின் சின்னமாக உங்களுக்குப் பலன் தர வந்திருக்கின்றோம். உங்கள் கத்திகளும்— கத்திகளைக் கூராக்கிய தீ முதலிய பூதங்களும்கூட எங்களுடன் ஒத்து உங்களைத்தான் தண்டிக்க முற்படும். வஞ்சியிலிருந்து சயசீலனை புறப்படுத்தி ஓட்டைப் படகில் வைத்துக் கடலில் விட்டீர்கள். பச்சிளங் குழவியையும் உடன் போக்கினீர். இரைந்துகொண்டிருக்கும் கடல் அவர்களுக்கு இரக்கம் காட்டியது. காப்பாற்றியது. இறை எண்ணத்தில் உறுத்திக் கொண்டிருந்தது. இராசேந்திரா, மகனைப் பிரிந்தாய், மனமுருகித் துன்புற்று உனது பாவத்தை உண்டு தீர்க்கின்றாய். உயர்ந்த சாவு உனக்கு எப்படிக் கிட்டும். எஞ்சிய பாவத்தை உண். இத்தீவல் உனக்கு நற்கதி கிட்டும். என்னைப்போன்று என் சகாக்கள் சயசீலனின் ஆட்களாக இங்கு அவர் குறிப்பின் வழி நின்று பணி புரிகின்றோம். இவையெல்லாம் அவர் அறிந்ததுதான். அவர் கட்டளையின்பேரில்தான் இவையெல்லாம் யாம் நிகழ்த்தினோம். நிகழ்த்துகின்றோம். சயசீலனிடம் சென்று வருவேன்.

காத்தவன் :— சயசீலன் முன்னின்று, வணங்குகின்றேன். எல்லாம் ஒருவாறு நடைபெற்றது.

சயசீலன் :– எனது மந்திரசக்தியும் நன்கு தன் வேலையை முடித்தது. பகைவர்களின் தீவினையும் அவர்களைவிட்டுக் கழிந்து கொண்டுள்ளது. காத்தவா, வீராசேந்திரனையும் மாலினியையும் பார்த்துவிட்டு வருகின்றேன்.

இராசேந்திரன் :— கோவிந்தரே, கடலின் எதிரொலியே காற்றிலிருந்து வந்ததாக நான் உணர்கிறேன். எம்மைத் துப்பிய கடல் எம்மைப் பழிதூற்றுகிறது. அதன் எதிரொலிதான் நான் கேட்டது. எனது மகன் கடலடியில் இருந்தால், நான் கடலுள் சென்று அவனைப் பார்த்தேயாகவேண்டும். நான் செய்த தவறினைப் பஞ்ச பூதங்களும் உணர்த்துகின்றன எனக்கு. சயசீலனின் தன்மையைப்—பெருமையை எனது தவறுடன் ஒத்திட்டுப் பார்த்து நான் நடுங்குகின்றேன்.

(தொடரும்)

சென்ற இதழின் தொடர்ச்சி

பாரி.

ச. பாலசுந்தரம்.

மதி : பொறுப்பறி யாதவர் வெறுப்பன செய்யின்
ஒறுப்பதற் குரிமையும் உண்டுமக் கறிஞ!
யாண்டொடு பருவமும் ஈண்டினர் இன்னும்
காண்டகு மழலைவாய்க் கன்னியர் ஆவரோ?
மன்னவர் கொடுக்குங் கண்ணோட் டத்தால்......

கபி : பொன்னிற் பொருத்திய நன்மணி போல
புகழொளி பரப்புவர் பூவையர் பூவினில்
மகிழ்மிகு செய்தியை மாறாய் உணர்ந்தனை
எல்லையின் நடுவே இருள்பிறந் திடுமோ?
முல்லையின் கொடிதனில் முள்ளியோ மலரும்?
குற்றம் புரிவரோ? கோமகள் நின்வயி(று)
உற்றவ ரல்லரோ? ஒல்லும் வகையால்
கல்வியின் நிரம்பினர் ஆதலின் என்பால்
செல்வியர்க் கறுவல் தீர்ந்ததென் றுரைத்தேன்

மதி : கல்விக் கெல்லையும் உண்டோ கவிஞ?

பாரி : கல்வி கரையில ஆயினும் கற்பவை
கற்போர் எனவிரு திறத்தினைக் கருதின்
எல்லையும் வகுத்தனர் நல்லற மேலோர்
முறைசெய் அரசர் நிறைசெய் அமைச்சர்
அறங்கூர் அவையார் மறந்தேர் வீரர்
தூதுவர் வேதியர் மாதவர் அறிவோர்
வாதுசெய் தொழிலோர் மருத்துவர் கணக்கர்
அறங்கரை நாவினர் ஆசிரி யன்மார்
உண்பொருள் விளைப்போர் மண்பொருள் செய்வோர்
வணிகர் கணிகர் பணிமுறை செய்வோர்
அனைவரும் கல்வியில் முனைகுவர் ஆயினும்

துறைதொறும் வரையறை முறைமையுண் டதனல்
சிறப்பும் பொதுவும் செம்மையிற் றாக்கி
நிறைபெறப் பயிறல் நெறியாம் அன்றியும்
இசையும் இயலும் கூத்தும் மரபும்
வசைதவிர் அறமும் பொதுவே; வாழ்வில்
தொழில்முறைக் கல்விகள் தோகையர்க் காகா
எழில்தரு கவின்கலே ஏற்பன ஆகும்
அவ்வழி நோக்கின் செவ்விய முறையில்
நின்னரும் மக்கள் பன்னருஞ் சிறப்புடன்
ஆடலும் பாடலும் அழகுறப் பயின்றனர்
பீடமை இலக்கியப் பெருங்கடல் திளேத்தனர்
இலக்கணத் துறைபடிந் தேறினர் கலக்கமில்
அறநெறி தெரிந்தனர் அடிசில் பயின்றனர்
தையலும் பின்னலும் செய்வகை தேர்ந்தனர்
பூத்தொடை அன்றியும் பாத்தொடை வல்லுநர்
ஓவியம் அன்றியும் காவியம் தீட்டுவர்
பாவளம் அன்றியும் நாவளம் மேவினர்
பாரியின் மக்களிப் பாரினர் போற்றுமோர்
சீரியர் ஆயினர் செந்தமிழ்த் தாயின்
ஓரிரு மக்களாய் உலகிடைத் திகழநும்
வடிவெடுத் தாலென வந்தவர் அதனல்
என்கடன் முடிந்தது மன்பதைக் குணர்த்தும்
நின்கடன் ஒன்றினி நிகழ்தல் வேண்டுமால்

பாரி : பைந்தமிழ் அரசே! நுந்திரு வடிமலர்
மேவினர்க் கரிதோ காவிய நூற்கடல்
அடியேன் செய்கடன் அறிவித் தருள்க,

மதி : பெற்றவர் அறிவரோ பிள்ளேகள் திறத்தினேக்
கற்றவர் உரைத்தால் களிப்பினிற் றிளேப்பர்
மற்றுநும் விருப்பினேச் சற்றெமக் குரைப்பின்
ஒல்லெனச் செய்குவம் நல்லறப் பெரியோய்!

கபி : அங்கவை சங்கவை இருவர்தம் புகழும்
செங்கதிர் போன்ருெளி திகழுதல் வேண்டும்
கற்றவர் கவிஞர் நாவலர் பாவலர்
முற்றிய கலேஞர் மூதறி வாளர்
யாவரும் ஒருங்கே மேவுற நிலேயில்
கலேயரங் கொன்றினேக் கடிதினிற் கூட்டி
கண்மணி இவர்கள் கல்வி புலப்பட
அரங்கேற் றுவிழா செய்வதற் கவாவினன்

பாரி : முகிலெனப் பொழியும் முதுபெருங் கவிஞரும்
பகலென விளங்கும் பாவல் லோரும்
மலையெனத் திகழும் கலைவல் லுநரும்
இலகுறுந் தமிழகத் தெய்சிறு குழந்தைகள்
கபி : செஞ்சுடர் முன்னர் மின்மினி போல
அஞ்சுவர் என்றுநின் அகத்திடை எண்ணுவை
பாரி : இல்லை அறிஞ இச்சிறு மங்கையர்
கல்வியில் கலையில் சொல்வலி யதனில்
வல்லவ ராயினும் பல்லவர் முன்னின்(று)
அவரவர் வினவ அயரா திறைதரும்
அத்தகு நிலையினை
கபி : ... ... மெத்தவும் அடைந்தனர்
உத்தம நின்னுளத் தித்தனை ஐயமும்
வேண்டாம் உடனே வினவுக இன்னே
காண்டும் அவர்திறம்
பாரி : ... ... கவிஞர் ஏறே!
நம்மா ணவியர் நண்மையில் எனக்கோர்
இம்மியும் ஐயம் இல்லை இருப்பினும்
பெண்பால் தம்மிடம் பேதைமை இருப்பது
கபி : நண்பா அறிவினில் ஆண்பெண் என்ற
பிரிவும் உண்டோ?
மதி : ... ... பெரியார் சொற்படி
தெரிகுவம் வினவி.
கபி : ... ... தேவியே முதற்கண்
தொடங்குக.
மதி : ... ... தூயோய் ஆணை; சங்கவை!
சங் : (வந்துகொண்டே) வணக்கந் தாயே ... ...
மதி : ... ... குழந்தாய் ஈண்டென்
வினுவற் கேற்ப... ....
சங் : ... ... விடையளிக் கின்றேன்
மதி : கற்றவர் யாவர்? ... ...
சங் : ... ... உலக நடையறிந்(து)
உற்றெழு குபவர் ... ...
மதி : ... ... முற்றிய கயவர்?
சங் : கண்ணோட் டமிலார் ... ...
மதி : ... ... எண்ணரும் வீரர்?
சங் : உளத்தைத் தம்வழி ஒடுக்கிந டப்பவர்

மதி : உளத்தொடு மெய்வாய்க் குறுமின் பம்எவை?
சங் : தன்னை மறத்தலும் மன்னிய வாய்மையும்
தென்றலில் உணர்வொடு திளைக்குநல் லுறக்கமும்
மதி : செவியினுக் கின்பம்? ... ...
சங் : ... ... சிறுவர்தம் மழலை
மதி : கண்ணினுக் கின்பம்? ... .
சங் : ... ... காதலர்க் காணுதல்
மதி : துன்பம் என்பது? ... ...
சங் : ... ... மனத்தது திரிபே
மதி : மகிழ்ச்சி; அங்கவை! நிகழ்த்துக நீசில!
பாரி : அடிமை செல்வர் ஏழை யார்யார்?
அங் : ஐம்புல வழியினிற் செல்வோர் அடிமை,
தம்மனம் நிறைந்தோர் செல்வர், இல்லது
விழைவோர் ஏழை ... ...
பாரி : ... ... அழகெனப் படுவது?
அங் : அகவிழிக் கின்பம் அளிப்பது ...
பாரி : ... ... அமைதி?
அங் : அவாவின் நீங்கலும் அறிவொடு பழகலும்
பா : உறவைக் கெடுப்பது? ... ...
அங் ; ... ... புறங்கூ றுதலே
பாரி : நட்பைக் கெடுப்பது? ... ...
அங் : ... ... தன்னலம் ஒன்றே
பாரி : அழிவற் றது? ... ...
அங் : ... ... நல் அறத்தால் வருபுகழ்
பாரி : பெரியோர் யார்? ... ...
அங் : ... ... அருள் நெறிவழிச் செல்பவர்
மதி : இன்னும் என்ன மன்னவ! புலவர்
இயம்பிய படிசெய
பாரி : ... ... இசைந்தனன் பாவாய்
கபி : வாழ்களன் மகளே! வாழிய! மன்னு!
வருவேன் தகுநாள் விரைவினிற் குறித்தே
எல்லோ : வணக்கம் அறிஞ!
கபி : வாழ்க நும்புகழ்.

(ஐந்தாங்காட்சி முடிவு.)

(தொடரும்)

ஊரரவம் கேட்ட ஒருத்தி

வித்துவான். ஆ. சிவலிங்கனுர், மயிலம்

மதுரைப் புறஞ்சேரியிலிருந்த இடைக்குல மடந்தை மாதரி வீட்டில், கோவலன் சிலம்பு விற்றுவரவேண்டி நகர் நோக்கிச் சென்ற பின்னர், மாதரியானவள் தன் மகள் ஐயையுடன் சில ஆயர் மகளிரைக்கொண்டு குரவைக் கூத்தாடும்படிச் செய்ய, அது கண்டிருந்த கண்ணகிக்குக் கோவலன் கள்வன் எனப்பட்டுக் கொலைக் களப்பட்ட செய்தியை அறிந்துவந்து, கூறியவள் யாவள் என்றுய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

இளங்கோவடிகள் ஆய்ச்சியர் குரவைக்குப் பின்னர்த் துன்ப மாலை என்ற தலைப்பில் முதற்கண் கோவலன் கொலைப்பட்டதை அறிந்தவள் யாவள் என்பதுபற்றிக் கூறவந்தபோது,

"ஆயர் முதுமகள் ஆடிய சாயலாள்
பூவும் புகையும் புனைசாந்தும் கண்ணியும்
நீடுநீர் வையை நெடுமால் அடியேத்தத்
தூவித் துறைபடியப் போயினுள் மேவிக்
குரவை முடிவிலோர் ஊரரவம் கேட்டு
விரைவொடு வந்தாள் உளள்"

என்று கூறினுர். ஊரரவம் என்பது மதுரையில் உலவியதான கோவலன் கள்வன் எனப்பட்டுக் கோவேந்தனுல் கொலைப்படுத்தப் பட்ட செய்திபற்றிய பேச்சாகும். சிலப்பதிகார அரும்பத உரையா சிரியர்,

"குரவை முடிவில் ஆயர் முதுமகள் துறைபடியப் போயினுள்;
ஆடிய சாயலாளாகிய ஐயை ஊரரவம் கேட்டுவந்தாள்"

என்று கூறி ஐயையே கோவலன் கொலைப்பட்டதைக் கேட்டுவந் தவள் என்ருர். அவரே 'வேறொருத்தி என்றும் கூறுவர்' என் றும் எழுதினுர். அடியார்க்கு நல்லார் இப்பகுதிக்கு

"மாதரி, இங்ஙனம் அவராடிய குரவை முடிந்த அளவிலே ஒழுக் கருத நீரையுடைய வையை யாற்றின் கரையிடத்து நெடுமாலடி யைப் பூமுதலியவற்றைத் தூவி ஏத்துதற்கு நீராடப் போயினு ளாக சாயலாள் வேறொருத்தி உள்நகரத்துப் பிறந்ததொரு வார்த்தை கேட்டுச் சென்றிருந்து கூறுதற்கு விரைவொடு வந் தாள் உளள் என்க"

என்றெழுதி ஊரரவம் கேட்டு வந்தவள் பெயர் அறியப்படாத வேறொருத்தி யென்ருர். அன்றியும்,

" முதுமகள் போயினுளுடைய சாயலாள் ஊரரவம் கேட்டுவந்து அவ்விடத்து நின்ருளுளள் என ஐயைமேல் ஏற்றுவாரு முளர். போயினுள் கேட்டு வந்தாள் உளள் எனப் பொருண்மை சுட்ட லாக்கி மாதரிமேல் ஏற்றலும் ஒன்று,

என்றும் எழுதினுர். எனவே மாதரி, ஐயை, வேருெருத்தி ஆகிய மூவரில் ஒருவரே ஊரரவம் கேட்டு வந்தவர் என்னலாம்.

மாதரி குரவை முடிவில் நீர்த்துறை படியப் போயினுள் என் பது உண்மை. ஆனுல் அவள் ஊரரவம் கேட்டுவந்து சொன்னுள் என்பது பொருந்தாது. ஏன் எனின் ஊரரவம் கேட்டு வந்தவள் ஒன்றும் கண்ணகியிடம் கூருமல் பக்கத்திருந்தவரிடம் மறையக் கூறிக்கொண்டிருந்ததாகவும், கண்ணகி தன்னைப்பற்றிய மறைவான செய்தியொன்றுண்டு என்று உட்கொண்டு அச்செய்தி யாதெனக் கேட்பான் வேண்டி ஒருத்தியை நோக்கிய விளி எல்லாவோ என்பத தாகவும் அறிகிரும். மாதரியை விளித்த விளியாயின் ஒருமையி லின்றிப் பன்மையில் இருக்கும். ஒருமையிலிருப்பினும் உயர்வு தோன்ற இருக்கும். தோழியை விளிப்பதுபோல் இராது. எல்லா என்பது தோழியை விளிக்கும் விளியாகும். மாதரி வீட்டில் தோழி என விளித்தற்குரியவள் ஐயை ஒருத்தியேயாவள். அதனுல்தான் தோழியென்றது 'ஐயையை' என்ருர் அரும்பத உரையாசிரியரும். எனவே ஊரரவம் கேட்டுவந்தவள் மாதரியல்லள் என்னலாம்.

கண்ணகிக்குக் கல்லெழுத்துக்கடவுள் மங்கலம் செய்த காலத்து " ஆடகமாடத் தரவணைக் கிடந்தோன் சேடக் குடும்பியின் சிறு மகள் ஒருத்தி, மாடல மறையவன் தன் கமண்டல நீரினைத் தன் மேல் தெளித்தவுடன் பழம் பிறப்புணர்ச்சியுடையவளாய்க் கண்ண கியை நோக்கிப் புலம்பியபோது,

" வருபுனல் வையை வான்துறைப் பெயர்ந்தேன்
உருகெழு மூதூர் ஊர்க்குறு மாக்களின்
வந்தேன் கேட்டேன் மனையிற் காணேன்
எந்தாய் இளையாய் எங்கொளித் தாயே"

என்று கூறிப் புலம்பினள். அவ்விடத்து நின்ற சேரன் செங்குட் டுவனிடம் மாடலன், " இப்பெண் பழம் பிறப்பில் மாதரி என்ற இடைக்குல முதுமகள்; கண்ணகியிடம் மாருத அன்புடையவள்; ஆதலின் மீண்டும் அவளைக் காணுமளவிற்குப் பிறப்பெடுத்தாள்" என்று கூறினுன். மாதரியாகிய அப்பெண் புலம்பலில், " வையை யாற்றினின்றும் நீராடித் திரும்பினேன்; ஊர்க்குறு மாக்களால் கோவலன் கொலையுண்டமை கேட்டேன்; வந்தேன்; மனையில் நின் னைக் கண்டிலேன்; எங்கொளித்தாயோ" என்றிருத்தலின், மாதரி

வீடு வருதற்கு முன்னரே கண்ணகி வெளியேறினள் என அறியலாம். அவ்வாறாயின் ஊரரவம் கேட்டுவந்து கண்ணகிக்குக் கூறினாள் என்பது பொருந்தாதாம். அப்புலம்பலில் 'எந்தாய்' என்றது கோவலனை என்பர் உயர்திரு, நாட்டாரவர்கள். கோவலன் சிலம்பு விற்கச் சென்ற பின்னர்க் குரவைக் கூத்து நிகழ்ந்தமையாலும், குரவை முடிவில் மாதரி நீர்த்துறை படியப் போயினமையாலும், திரும்பியபோது கண்ணகியைக் காணாமையாலும் அப்போது கோவலனைக் காணவேண்டும் என்பதின்மையானும் 'எந்தாய்' என்றது கண்ணகியையே என்னலாம். கவுந்தியடிகள் மாதரியிடம் கண்ணகியின் உயர்வெல்லாம் கூறிக் "கற்புக் கடம்பூண்ட இத் தெய்வமல்லது, பொற்புடைத் தெய்வம் யாம் கண்டிலமால்" என்றும் கண்ணகியைப்பற்றிக் கூறியிருத்தலின் மாதரி கண்ணகியை மதிப்பாகவே 'தாய்' என்றாள். கவுந்தியடிகளால் அடைக்கலப் பொருளாகத் தரப்பட்டவள் கண்ணகி.

> "............ தொல்லோர் சிறப்பின்
> ஆயமும் காவலும் ஆயிழை தனக்குத்
> தாயும் நீயே யாகித் தாங்கு"

என்று கவுந்தியடிகள் மாதரியிடம் கூறியுள்ளார். கோவலனையின்றிக் கண்ணகியையே அடைக்கலப் பொருளாகப் பெற்றாள் மாதரி என்பதை,

> அரும்பெறற் பாவையை அடைக்கலம் பெற்ற
> இரும்பே ருவகையின் இடைக்குல மடந்தை"

என இளங்கோவடிகள் கூறியதாலும் அறியலாம். எனவே நீராடப் போந்தவள் மீண்டு வீடுவந்த காலத்தில் கண்ணகியைக் காணாமையால் ' அடைக்கலம் இழந்தேன் " எனப் புலம்பினாள். அதனையேதான் இறந்து சேடக்குடும்பியின் சிறுமகளாயினபோதும் பழம் பிறப்புணர்ச்சியால் கண்ணகிச் சிலைமுன் நின்று "வந்தேன் மனையிற் காணேன்" என்றாள். எனவே "எந்தாய்" என்றது கண்ணகியையே குறிக்கும் என்னலாம். இம் முடிபால் மாதரி ஊரரவம் கேட்டுவந்து முதலில் கண்ணகியிடம் கூறவில்லை என்ற முடிபிற்கு வரலாம்.

இனி ஐயை யாவளோ என்பதுபற்றிக் காண்பாம். இளங்கோவடிகள்,

> " அவள்தான்,
> சொல்லாடாள் சொல்லாடா நின்றாள் அந்நங்கைக்குச்
> சொல்லாடும் சொல்லாடும் தான் "

என்று தொடர்ந்து கூறியுள்ளார். ஊரரவம் கேட்டு வந்தவள் அதனைத்தான் கண்ணகியிடம் கூறாமல் ஐயையிடமும் பிறரிடமும் காதோடு காதாகக் கூறினாள். அதுகண்ட கண்ணகி ஐயையை

நோக்கித் தன் ஆவலைக் கூறுவாள்" என்பதே அவ்வடிகளின் பொருளாகும். ஐயை ஊரரவம் கேட்டவளாயின் நேரே கண்ணகியிடம் கூறுவாளேயன்றிப் பிறரிடம் கூறமாட்டாள். (தாய் மாதரி இருந்தால் அவளிடம் கூறியிருப்பாள்) ஏன் எனின், கண்ணகிக்கு ஐயை நாத்தூண் நங்கை என்று மாதரியால் முன்னர்க் கூறப்பட்டாலும். "ஐயை காணீர் அடித் தொழிலாட்டி" என்று கூறிய உரிமையும் உடையவள். எனவே தானறிந்த செய்தியை நேரிற் கூறற்குரியவளாவாள். பிறளாயின் நேரிற் கூறற்கு மனம் ஒருப்படாது நெருங்கிய உரிமையுடைய ஐயையிடம் கூறி அவள் மூலம் கண்ணகிக்குக் கூற முற்படலாம். அன்றியும், கண்ணகி எல்லாவோ (தோழியே) என விளித்து, ஏதிலார் சொன்னது—மன்பதை சொன்னது—எஞ்சலார் சொன்னது யாது எனக் கேட்டலினாலும் ஏதிலார் முதலியன பங்கைநட்பு இல்லாத அயலாரைக் குறித்தலினாலும் ஐயை ஊரரவம் கேட்டுவந்தவளல்லள் என்னலாம்.

"குரவை முடிவில் முதுமகள் (மாதரி) போயினள்; ஊரரவம் கேட்டுவந்தாள் உளள்" எனக் கூறியதுகொண்டு நோக்குமிடத்துக் குரவை முடிந்த நிலையிலேயே அதாவது குரவையாடிய மகளிர் பிரிந்து செல்லும் முன்னரேயே (மாதரி நீராடப் போனபின்) ஊரரவம் கேட்டவள் வந்தாள் என எண்ணவேண்டும். இதனைக் கோவலன் கொலையுண்ட செய்தியைக் கேட்டுப் பொங்கியெழுந்த கண்ணகி பின்னர், "வாய்வதின் வந்த குரவையின் வந்தீண்டும், ஆய மடமகளிர் எல்லீரும் கேட்டீமின்" என்று கூறியதாலும் அறியலாம். இதனானும் ஐயை ஊரரவம் கேட்டுவந்தவளில்லை என்னலாம்.

முடிவாக ஆயர் மகள் ஒருத்தி—குரவைக் கூத்தினைக் கண்டவள்—இடையிலேயே சென்றவளோ, அன்றிக் குரவையைக் காணாதவளும் ஆனால் கண்ணகியை அறிந்தவளும் ஆன ஒருத்தியோ ஊரரவம் கேட்டவள் விரைந்து இதனையறிவிக்க வேண்டும் என்று வந்தாள் என்னலாம். ஏனெனின் கண்ணகியிருந்த இடம் மதுரைப் புறஞ்சேரியாதலின், ஊராகிய மதுரையில் நிகழ்ந்த அரவம் கேட்டு வருதற்குச் சிறிதுநேரம் ஆகுமன்றோ? அடியார்க்கு நல்லாரும் "இது புறஞ்சேரியாதலின் 'ஊர் அரவம்' என்றார்" என்று கூறியிருத்தலும் நோக்குதற்குரியது. ஊரரவம் கேட்டு வந்தவளாலேயே அது சேரியரவமாக ஆயிற்று என்னலாம். எனவே மாதரியும் அல்லள்; ஐயையும் அல்லள்; வேறு ஒருத்தியே ஊரரவம் கேட்டு வந்தவள் என்க.

கூட்டுறவுப் பதிப்பகம், தஞ்சாவூர்.